1981 மார்ச் 7]

திரு. க. இராமமூர்த்தி : தொழில் கல்லூரிகளில் சட்டக் கல்லூரியை மட்டும் எடுத்துக்கொண்டால், இன்றைக்கு தமிழ் நாட்டில் ஐந்து சட்டக் கல்லூரிகள் இருப்பதால், ஒரு கல்லூரியின் கல்வி ஆண்டில் ஏதாவது காரணத்தால் ஏற்படுகின்ற தாமதம், வேலை நிறுத்தம் போன்றவை இன்னொரு சட்டக் கல்லூரியையும் பாதித்து விடுகிறது. அதனால் அந்தக் கல்லூரியும் வேலை நாட்களை நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இப்போது தேர்வுகள் எல்லோருக்கும் பொதுவாக நடப்பதால், ஒரு கல்லூரியில் ஏற்படுகின்ற சிக்கல் இன்னொரு கல்லூரியையும் பாதிப்பதால், அப்படி பாதிக்காதவாறு பாதிப்பைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மதுரைப் பல்கலைக் கழகம் மதுரை சட்டக் கல்லூரித் தேர்வுகளை நடத்துகிறது. மற்ற மூன்று இடங்களில் சென்னைப் பல்கலைக் கழகம் தேர்வுகளை நடத்துகிறது. கோவை சட்டக் கல்லூரிக்குத் தேர்வுகளை, கோவை பல்கலைக் கழகம் நடத்தும். தன்னாட்சி என்பது அந்தந்தக் கல்லூரிக்கு இருக்க வேண்டிய சுதந்திரத்தால் அந்தந்தக் கல்லூரியே தேர்வை நடத்தும். அந்த வாய்ப்பினை நான்கு சட்டக் கல்லூரிகளுக்கும் தனித் தனியே தர முடியாது. அப்படியே தந்தாலும், அந்த வாய்ப்பினை சென்னை சட்டக் கல்லூரிக்குத்தான் முதலில் தர வேண்டும். முதலில் இதில் இருக்கிற சிக்கல்களை எல்லாம் சரி செய்த பிறகு, இதைத் தருவதுதான் பொருத்தமாக இருக்கும்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மற்ற கல்லூரிகளைவிட சட்டக் கல்லூரிகளில் வேலை நிறுத்தம் அதிகமாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அங்கே மாணவர்கள் சட்டம் பயின்று கொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு) அங்கே பயிலுபவர்கள் சட்டங்களைத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். உயர் நீதிமன்றத்திற்குப் பக்கத்தில் இருக்கிறார்கள். இந்த ஒன்று தான் இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கிற முக்கிய வேறுபாடு.

கல்வி வாரியம்.

*** 123 வினா.—திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) எல்லாப் பள்ளிகளையும் அரசே ஏற்று, கல்வி வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) இல்லையெனில், பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தமிழ் நாட்டிலே மின்வாரியம், வீட்டுவசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் முதலிய வாரியங்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் வாரியங்களாக இருக்கின்ற காரணத்தால், மக்களுக்கு விரைந்து செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. கல்வித் துறையில் கூட காலதாமதம் மற்றும் ஏனைய சங்கடங்களை எல்லாம் தவிர்க்க அரசியல் தொடர்பு இல்லாத கல்வியாளர் களைக் கொண்ட குழு ஒன்றினை ஏற்படுத்தி அதனை அவர்களிடத்தில் ஒப்படைத்தால், எப்படி பல்கலைக் கழகங்களில் அரசு கூட தலையிட முடியாத ஒரு நிலை இருக்கிறதோ அது போல் இதிலும் ஒருவரும் தலையிட முடியாத நிலை ஏற்படும். பல்வேறு சீர்திருத்தங்கள், தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்கின்ற வாய்ப்புகள் எல்லாம் ஏற்படும். அந்த வகையில் இப்போது எல்லாப் பள்ளிகளையும் அரசே ஏற்று, கல்வி வாரியம் அமைக்கின்ற செயற்குறிப்பு தற்போது இல்லாவிட்டால் கூட வருங்காலத்திலாவது இதுபற்றிப் பரிசீலிக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் இரண்டு, மூன்று பிரச்சினைகளை தொடர்புபடுத்தி இங்கே பேசியிருக்கிறார். எல்லாப் பள்ளிகளையும் என்கிற பிரச்சினை வரும்போது, வீட்டு வசதி வாரியம் எல்லா வீடுகளையும் கட்டுவதே இல்லை. அவர்கள் குறிப்பிட்ட பணிகளைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். அதேசமயத்தில் கல்வி வாரியம் என்பதைப் பொறுத்தவரை கூட, நாம் சில பிரச்சினைகளை அணுகுவதற்குத் தேவையாகத் தான் இருக்கிறது என்பதையும் அரசு உணருகிறது. இப்போது நாம் எல்லாப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்ட வேண்டுமென்று இருக்கிறோம். அதற்காக எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களை அணுகுகிறோம் என்றால், அவர்கள் உடனே இப்படிப்பட்ட ஒரு வாரியத்தை அமைத்தால் தான் பணம் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இது தேவை என்று படுகிறது. அரசியல் சார்பு இல்லாமல், அரசு தலையிடாமல் ஒரு அமைப்பு அதுவும் தமிழ் நாட்டில் அமைய முடியும் என்கிற நம்பிக்கை நமக்கு இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அரசியல் வைத்துக் கொண்டு தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரசியல் பற்று இல்லாதவர்கள் யார் என்பதுதான் நம்மால் கண்டுபிடிக்க முடியாத ஒன்று, அது மிகச் சிரமமான காரியம். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு பெரிய முயற்சியில் நாம் இறங்கத் தேவையில்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அரசுப் பள்ளிக்கூடங்களிலேயே இப்போது பல குறைகள் இருக்கின்றன. கல்வியை எடுத்துக்கொண்டால், கல்வித் துறை, உள்ளாட்சித் துறை, வனத் துறை, வணிக வரித் துறை,

பிற்பட்டோர் நலத் துறை, அரிசன நலத் துறை இப்படி பல்வேறு துறைகள் பள்ளிக்கூடங்களை நடத்துகின்ற காரணத்தால், பலவிதமான நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்போது உள்ளாட்சித் துறைப் பள்ளிகளைப் பொறுத்தவரை, அரசின் கல்வித் துறையினுடைய கட்டுப் பாட்டில் கொண்டுவர முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது பல்வேறு துறைகளில் இருக்கின்ற அரிசனப் பள்ளிகள், பிற்பட்டோர் நலத் துறைப் பள்ளிகள், வனத் துறைப் பள்ளிகள் இப்படிப்பட்ட பல்வேறு துறைகளில் நடத்தப்படுகின்ற பள்ளிகளை எல்லாம் அரசின் கல்வித் துறை யினுடைய நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்தால், இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படாமல் நல்ல பலன் ஏற்பட வாய்ப்பாக இருக்கும். இதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசே எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்த வேண்டும் என்பதில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் பிரச்சினைகள் வருகின்றபோது, இப்போது நாம் முழுமையாகத் தலையிட முடியாமல் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்தினுடைய நிர்வாகத்தில் இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளினுடைய ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று நாம் முனைந்தபோது, ஆசிரியர் களுடைய சங்கங்கள் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதோடு அந்தப் பள்ளிகளையும் அரசே எடுக்க வேண்டுமென்கிற கோரிக்கையையும் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையில் முடிவெடுத்தால், முதன் முறையாக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எல்லாம் அரசின் நிர்வாகத் திற்குள் வருகின்றன. இப்போதே கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற எல்லா தொடக்கப் பள்ளிகளும் அரசின் நிர்வாகத்தில் தான் இருக்கின்றன. வருங்காலத்தில் அந்த நிலைமை தமிழ் நாடு பூராவும் வரும். அப்படி வருகின்றபோது, அதற்குத் தேவையான, தனியான நிர்வாக அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு வரும். அது நிச்சயமாக ஏற்படுத்தப்படும். அதை ஏற்படுத்திய பிறகு பள்ளிகளை எல்லாம் எடுப்பது ஒன்றும் கடினமாக இருக்காது. ஆகவே அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்தினைப் பரிசீலனை செய்யலாம்.

திரு. பா. ரா. தாமஸ் : அனைத்துப் பள்ளிகளையும் அரசே ஏற்று நடத்தி வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தே தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லையென்ற காரணத்தால்தான் உருவானது. இப்போதிருக்கின்ற சட்டப்படி கூட முறையாக அவர்களுக்குப் பாதுகாப்பு தரப்படவில்லை. அந்த முறையில் இப்போது இருக்கக்கூடிய சட்டத்தை முழுமையாக ஆசிரியர்களுக்கு முழுப் பாதுகாப்பு

அளிக்கக்கூடிய முறையில் திருத்தி அமைத்து விட்டாலே வாரியம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வராது. இது குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : நமக்கு இருக்கிற முக்கியமான பிரச்சினைகள் இரண்டு. நல்ல கல்வியை, தரமான கல்வியை, எல்லோருக்கும் தர விரும்புகின்ற முயற்சி என்பது ஒன்று. ஆசிரியர்களுக்கு நல்ல பணிப் பாதுகாப்பு தருவது என்பது இன்னொன்று. இரண்டு கருத்துக்களையும் இணைத்து. அரசே இதைச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை இந்தக் கேள்வியை எழுப்பியிருப்பதன் மூலம், ஆசிரியர்களுடைய சங்கங்களெல்லாம், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இரண்டையும் பற்றி இப்போது நாங்கள் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு என்பதைப் பொறுத்தவரை, முழுமையாக அதைத் தர பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த நடவடிக்கை மூலம் நிச்சயம் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். அதற்காக வேண்டி எல்லாப் பள்ளிகளையும் அரசே எடுக்க வேண்டிய சூழ்நிலை இப்போது இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இப்படி வாரியம் அமைத்து எல்லாப் பள்ளிகளையும் அரசே எடுக்க வேண்டுமென்கிற கோரிக்கையைப் பொறுத்த வரையில், மாணவர்கள், ஆசிரியர்கள் நலன் கருதி ஆசிரியர் வாரியம் என்றும் மாணவர் வாரியம் என்றும் இரண்டு வாரியங்களை அமைத்தால், இருவரும் ஒருவரையொருவர் வாரிவிடாமல் இருக்க அது வாய்ப்பாக இருக்கும். அந்த வகையில் அரசு இதைப்பற்றி யோசிக்குமா ? (சிரிப்பு)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆசிரியர் நலன் கருதி, மாணவர் நலன் கருதி அரசு இப்போதே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பிரச்சினைக்கே இடமில்லை.

நக்சலைட் கைதிகள்.

* **124 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980, ஜூலை மாதம் முடிய தமிழ்நாட்டு சிறைகளில் எத்தனை நக்சலைட் கைதிகள் இருக்கிறார்கள் ?